தூத்துக்குடி நகராட்சி உறுப்பினர்கள் எல்லோரும் நகராட்சி மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமையினால் நகராட்சிமன்றக் கூட்ட நடவடிக்கைகள் நடக்காது தடைப்பட்டு போய், மதிய உணவும் சரியாக வழங்கப் படாமல் தூத்துக்குடி நகர் மன்ற மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற கஷ்டமான அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிலையை சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்துவிட்டு விவா திக்கக் கோருகிறேன்" என்று.

இது சம்பந்தமாக விவாதிக்க மானியக் கோரிக்கைகள் வரும்போது பேசுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதால், இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதியின் (3) வது உட்பிரி வின்படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களை கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(அ) சென்னையில் மண்ணெண்ணெய் பற்றுக்குறையும், மக்கள் அல்லலும்.

Dr. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Agriculture to to a matter of urgent public importance, namely, the continued scarcity of kerosene oil in the City of Madras throwing several families belonging to lower and middle class people into great hardship.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மண்ணெண்ணெய் விநியோகத்தில் இப்பொழுது ரேஷன் முறை கிடையாது. நம் மாநிலத்தில் மண்ணெண் ணெய் வழங்கும் நிறுவனங்கள் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், கால் டெக்ஸ், பர்மாஷெல், எஸ்ஸோ ஆகியவை. சென்ற ஓராண்டாக எடுத்த புள்ளி விவரங்களின்படி சென்னை நகரத்திற்குத் தேவையான மண்ணெண் ணெய் மாதத்திற்கு 4,200 கிலோ லிட்டர் (1 கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர் அடங்கியது) இந்த தேவைக்கு எதிராக 4,685 கிலோ லிட்டர் சென்னை நகரத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 3,300 கிலோ லிட்டரை இந்தியன் ஆயில் கார்ப்பொரேஷனும் எஞ்சியதை மற்ற மூன்று நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. இந்தியன் ஆயில் கார்ப் பொரேஷன் மணணெண்ணெயை கொச்சின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலை யத்திலிருந்து வரவழைக்கின்றது. சாதாரணமாக இது கப்பல் மூலமாக வருகின்றது. இந்த நிறுவனங்கள் மொத்த வியாபாரிகளை நியமித்துள் ளார்கள். இந்த மொத்த வியாபாரிகள் சில்லரை வியாபாரப் பொறுப்பை கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கும், சில்லரைக்கடைகளுக்கும், கைவண்டிக் காரர்களுக்கும் ஒப்படைத்துள்ளனர். மார்ச் மாத முதல் தேதி வரை மண்ணெண்ணெய் லிட்டர் 51 பைசா நியாயவிலையாக நிர்ணயிக்கப்பட் டிருந்தது. மார்ச் முதல் தேதிக்குப் பிறகு கலால் வரி ஏற்றப்பட்டுள்ளதை யொட்டி லிட்டருக்கு 55 பைசாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.